**தினமணி 04.03.2019**

# டிஎன்பிஎல் சார்பில் பள்ளிகளுக்கு கையேடுகள்



வினா – விடை கையேடுகளுடன் புகழூர் பெண்கள் பள்ளி மாணவிகள். உடன், ஆலை நிர்வாகிகள்.

**கரூர், மார்ச் 3:** தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தின் சார்பில் 10 ஆம் வகுப்பு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு கற்றல் கையேடுகள் வழங்கும் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

டிஎன்பிஎல் சமுதாயப் பணி திட்டத்தின் கீழ்

கரூர் மாவட்டத்தில் அமைந்துள்ள 28 அரசுப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் பயன்பாட்டிற்கு ரூ. 4 லட்சம் மதிப்பில் வினா-விடைகள் கொண்ட கற்றல் கையேடுகள் வழங்கும் நிகழ்ச்சியின் தொடக்க விழா புகழூர் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், டிஎன்பிஎல் நிறுவன செயல் இயக்குநர் (இயக்கம்)கிருஷ்ணன்,முதன்மைபொது மேலாளர் (மனிதவளம்)பட்டாபிராமன், முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி) தங்கராசு ஆகியோர் மாணவ, மாணவிகளுக்கு வினா-விடை அடங்கிய கற்றல் கையேடுகளை வழங்கி வாழ்த்து கூறினர்.

நிகழ்ச்சியில் புகழூர் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகள், உதவி தலைமையாசிரியை மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்டோர் திரளாகப் பங்கேற்றனர்.